<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.396/2014</u>
<u>நாள். 24.10.2025</u>

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==================================================================

| | |
|---|---|
| பெயர் = திரு. அம்மாசி | தகப்பனார் பெயர்= திரு. பழனிமுத்து |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==================================================================

**<u>DW2 மு.வி</u>**

1) நான் இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கருடமங்களத்தில் குடியிருந்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்துள்ள ரவிச்சந்திரன், பூஞ்சோலை ஆகியோரை எனக்கு தெரியும். பூஞ்சோலையின் தந்தை பெயர் கந்தன். கந்தனுக்கு 3 பிள்ளைகள் தர்மலிங்கம், பூஞ்சோலை, சின்னம்மாள் ஆகியோர். தர்மலிங்கம் தற்போது உயிருடன் இல்லை.

2) கந்தன் 1986ல் தனது மகன்களுக்கு தலா 50 செண்ட் நிலத்தை எழுதிக்கொடுத்தார். மேற்படி ஆவணம் செட்டில்மெண்ட் ஆவணம் என்று சாட்சி முதலில் கூறிவிட்டு பிறகு உயில் ஆவணம் என்கிறார். மேற்படி ஆவணத்தில் கந்தன் கைரேகை வைத்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் நானும், நடராஜீம் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம்.

3) மேற்படி பி.சா.ஆ.3 உயில் ஆவணத்தை சார்பதிவக அலுவலகத்தில் கொடுத்த போது யாரெல்லாம் இருந்தனர் என்றால் நானும், நடராஜனும். நானும், நடராஜனும் அங்கு என்ன செய்தோம் என்றால் கந்தன் கைரேகை செய்ததை நாங்கள் பார்த்தோம். மேற்படி உயில் ஆவணத்தில் யார் முதல் சாட்சி கையொப்பம் செய்தது என்றால் நடராஜன், 2 வதாக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். மேற்படி உயில் ஆவணத்திற்கு விபரம் கூறியது யார் என்றால் கந்தன்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1) பூஞ்சோலைக்கும், எனக்கும் விரோதம் எதுவும் இல்லை என்றால் சரிதான், விரோதம் இல்லை. பூஞ்சோலை எனக்கு என்ன உறவு முறை என்றால் மாமன், மைத்துனர் வகையில் உறவு. நான் எனது முதல்விசாரணையில் சொல்லியுள்ள உயிலை நான் கடைசியாக எந்த தேதி, மாதம், வருடத்தில் பார்த்தேன் என்றால் நியாபகம் இல்லை. நடராஜனும், பூஞ்சோலை மற்றும் பொன்னரும்பு ஆகியோருக்கு மாமன், மைத்துனர் வகையில் உறவு என்றால் சரிதான்.

2) நான் மேற்சொன்ன பி.சா.ஆ.3 உயில் ஆவணத்திற்கு என்ன மூல ஆவணம் கொடுத்தார் என்றால் வெள்ளைதாள் மட்டும் தான் கொடுத்தார். பி.சா.ஆ.3 ஆவணம் எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் அதை நான் பார்க்கவில்லை. வழக்கு சொத்தை தற்போது யார் சாகுபடி செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு கருடமங்கலம் கிராமத்தில் சொத்து உள்ளதா என்றால் வீடு உள்ளது.

3) மேற்படி வீடு எத்தனை செண்ட் என்றால் 2-1/2 செண்ட் இருக்கும். கந்தன் பி.சா.ஆ.3 ஆவணத்தில் எத்தனை அயிட்ட சொத்து எழுதி வைத்தார் என்றால் 2 அயிட்ட சொத்து. 1 வது அயிட்டம், 2 வது அயிட்டம் என்று எழுதினாரா என்றால் ஆமாம். மேற்படி 1,2 அயிட்ட சொத்துக்களின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. சின்னம்மாள் (எ) பொன்னருப்பு, பூஞ்சோலை ஆகியோர் சென்னையில் எத்தனை வருடங்களாக வசித்து வருகின்றனர் என்றால் 10-15 வருடங்களாக.

4) மேற்படி நடராஜன் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் உறவு இல்லை, பழக்கமானவர். வழக்கு சொத்தை வாதியின் மனைவி வனிதா தான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வனிதாவிற்கு முன்பு தர்மலிங்கம் சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணத்தில் கந்தன் தனக்கு கை நடுக்கமும், கண்பார்வை குறைவும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளதை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை.

5) மேற்படி விபரத்தை கந்தன் பத்திர எழுத்தரிடம் கூறியதை நான் நேரடியாக கேட்டேனா என்றால் கேட்டேன். பூர்வீக சொத்தில் ஆண் வழி வாரிசான தர்மலிங்கத்திற்கு சொத்து சேரக்கூடாது என்பதற்காக பிற பெண் வாரிசுகளுடன் சேர்ந்து பி.சா.ஆ.3 உயில் ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எனது ஆதார் அட்டையை கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. (2 ம் பிரதிவாதி பூஞ்சோலை பி.சா.2 ன் ஆதார் அட்டை அவரது பையில் உள்ளதாக கூறுகிறார்) மேற்படி கூறிய நபர் யார் என்றால் அவர் தான் பூஞ்சோலை.

6) 2ம் பிரதிவாதி இவ்வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தாரா என்றால் ஆமாம், ஆனால் அதற்கு முன்பாகவே நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்துவிட்டது. எனக்கு உடல்நிலை சரியில்லாததால் நல்லபடியாக சாட்சியம் அளிக்குமாறு 2ம் பிரதிவாதி என்னிடம் சொன்னார் என்றால் சரிதான்.

7) பி.சா.ஆ.3 ஆவணம் நடைமுறைக்கு வந்ததா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு சகாயம் செய்ய இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 உயில் ஆவணம் சட்டப்படி அமையப்பெறவில்லை என்றாலும், நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பனர் பெயர் என்ன என்றால் பழனிமுத்து.